[*2022 ஏப்ரல் 11*

86—

இசைப் பள்ளி

***11699—டாக்டர் சி. விஜயபாஸ்கர்:**

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) விராலிமலையில் இசைப் பள்ளி துவக்க அரசு ஆவன செய்யுமா?

(ஆ) ஆம், எனில், எப்போது?

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு, தொழில் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

(அ) மற்றும் (ஆ) புதுக்கோட்டை மற்றும் திருச்சிராப்பள்ளியில் மாவட்ட அரசு இசைப் பள்ளிகள் தனித்தனியாக இயங்கி வருகின்றன. மேலும், திருச்சிராப்பள்ளியில் அரசு நிதி உதவியுடன் கலைக் காவிரி நுண்கலைக் கல்லூரி இயங்கி வருகிறது. இவை விராலிமலையிலிருந்து முறையே, 42, 28 கி.மீ. தொலைவில் இயங்கி வருவதால், விராலிமலை தொகுதியில் புதிய இசைப் பள்ளி துவங்க வேண்டிய அவசியம் தற்போது எழவில்லை என்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, புதுக்கோட்டை மாவட்டம், விராலிமலை சட்டமன்றத் தொகுதி என்பது பிரசித்தி பெற்ற முருகன் ஸ்தலத்திற்கு மட்டும் பெயர் பெற்றது அல்ல, ஒரு காலத்தில் பரதம், நாட்டியம், தவில், நாதஸ்வரம் போன்ற பல்வேறு கலைகளை வளர்த்த மண் ஆகும். இன்னும் சொல்லப்போனால், சதிராட்டக் கலையில் மிகப் பெரிய சாதனை படைத்த முத்துக்கண்ணம்மாள் என்பவருக்கு இந்தியக் குடியரசுத் தலைவரின் உயரிய விருதான பத்ம***ஸ்ரீ*** *விருது சமீபத்தில் குடியரசுத் தலைவர் அவர்களால் வழங்கப்பட்டு, கௌரவிக்கப்பட்டுள்ளார்கள். அவர், தமிழகத்திற்கு, விராலிமலை மண்ணிற்கு பெருமை சேர்த்துள்ளார். ஆகவே, கலை வளர்த்த அந்தப் பூமியிலே, அந்தப் பகுதியின் முக்கியத்துவத்தைக் கருதி,*

2022 ஏப்ரல் 11]

கோயில் ஸ்தலத்தைக் கருதி, வருங்காலத்தில் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் அங்கு இசைப் பள்ளி அமைக்க ஆவன செய்வார்களா என்பதைத் தங்கள் வாயிலாக அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு உறுப்பினர், முன்னாள் அமைச்சர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள் குறிப்பிட்டதைப்போல, விராலி மண், கலை வளர்த்த மண் ஆகும். பெரும் இசைவாணர்கள் வாழ்ந்த, வாழ்கின்ற பூமி அது. குறிப்பாக, பரதநாட்டியம் என்று சொல்லக்கூடிய கலையில், 32 வகையான அடவுகளுக்கும் தனித்தனியே நாட்டிய அபிநயங்களோடு, அதைப் பாடக்கூடிய மிகச் சிறப்பான பரதநாட்டியக் கலைஞர்கள் அங்கே வாழ்ந்தனர். இசைப் பரம்பரையினர் வாழ்ந்த பெருமைக்குரிய மண் அது. குறவஞ்சி நாடகத்தை 1973 ஆம் ஆண்டு வரையிலும்கூட நடத்திய மண் அது. அருணகிரிநாதரால் பாடல்பெற்ற ஸ்தலம் அங்கு உள்ளது. அந்த மண்ணுக்கென்று தனியாக இசைப் பாரம்பரியம் இருப்பதை மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் சுட்டிக்காட்டியதை நான் வரவேற்கிறேன். ஆயினும்கூட, அங்கே புதிதாக இசைப் பள்ளி அமைப்பதைப் பொறுத்தவரையில், அருகிலே 28 கி.மீ. தூரத்தில் திருச்சியிலும், 42 கி.மீ. தூரத்தில் புதுக்கோட்டையிலும் பள்ளிகள் இருக்கின்றன. எதிர்காலத்திலே அங்கே இசை மரபினை போற்றி வளர்க்கக்கூடிய ஒரு சாதகமான சூழ்நிலை ஏற்படுமென்றால், நிச்சயமாக மாண்புமிகு உறுப்பினர் அவர்களுடைய கருத்தை மாண்புமிகு முதலமைச்சர் அவர்களுடைய கவனத்திற்கு இந்த அரசு எடுத்துச் சென்று பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்கிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் டாக்டர் சி. விஜயபாஸ்கர் அவர்கள்.*

டாக்டர் சி. விஜயபாஸ்கர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, விராலி மண்ணின் பெருமையைப் பதிய வைத்ததற்கும், சாதகமான சூழ்நிலை ஏற்படுமென்றால் வருங்காலத்தில் பரிசீலிக்கப்படும் என்றும் கூறிய மாண்புமிகு அமைச்சர் அவர்களுக்கு நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். கலை வளர்த்த பூமி நம்முடைய தமிழகம். பரதம், கலை, நாட்டியம், கலாசாரம்,*

பண்பாடு, ஜல்லிக்கட்டு என பல கலைகளை வளர்த்த தமிழகத்தில், வருங்காலத்தில் கலை பண்பாட்டுத் துறையின் மூலமாக, தமிழகம் முழுவதும் இருக்கக்கூடிய கலைஞர்களை ஊக்குவிப்பது மட்டுமல்ல, உற்சாகப்படுத்துவது மட்டுமல்ல, உலகளவிலே தமிழகத்தினுடைய கலைகளை எடுத்துச் செல்லக்கூடிய வகையிலே புதிய திட்டங்களை உருவாக்குவதற்கு அரசு கருத்துருக்களை ஏற்படுத்துமா என்பதை மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்கள் மூலமாக மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–10

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் தலைமையிலே இருக்கக்கூடிய இந்த அரசு கலை பண்பாட்டுத் துறைக்கு பெரும் முக்கியத்துவம் அளிக்கக்கூடிய ஓர் அரசாக இருக்கிறது. உதாரணமாக, அண்மையிலே நடைபெற்ற ‘நம்ம ஊரு திருவிழா’–வில், தமிழ்நாட்டினுடைய பல்வேறு பகுதிகளிலும் இருக்கக்கூடிய கலைவடிவங்களை, குறிப்பாக, நாட்டார் கலை வடிவங்களை சென்னையிலே காட்சிப்படுத்தக்கூடிய ஒரு பெரும் நிகழ்வினை மிக வெற்றிகரமாக நடத்தியது. அதுபோல், நலிவுற்ற கலைஞர்கள் இருப்பார்களென்றால், அவர்களையும் அவர்களுடைய வாழ்வாதாரத்தையும் மீட்டெடுக்கக்கூடிய வகையிலே அவர்களுக்கான உதவித்தொகையை உயர்த்தி வழங்குவதாக இருந்தாலும், இந்தக் கலை வடிவங்களை உலகெலாம் பரவச் செய்கிற விஷயங்களாக இருந்தாலும், மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் அதிலே நேரடியாக மிகுந்த ஆர்வம் காட்டுகிறார். அவருடைய வழிகாட்டுதலிலே இயங்கக்கூடிய இந்தக் கலை பண்பாட்டுத் துறை, வருங்காலங்களிலும் தமிழ் மண்ணுக்கு என்று சொந்தமாக இருக்கக்கூடிய இத்தகைய நுண்கலைகளை, கலை வடிவங்களை, செவ்வியல் இசை கலை வடிவங்களை உலகெல்லாம் பரவச் செய்யக்கூடிய வகையில் தன்னை ஈடுபடுத்திக்கொள்ளும் என்பதைத் தங்கள் வாயிலாக நான் மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரிவித்துக்கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு உறுப்பினர் திரு. ஜி.கே. மணி அவர்கள்.*

2022 ஏப்ரல் 11]

திரு. ஜி.கே. மணி: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, உலகின் ஆதி இசை தமிழ் இசை. தமிழ் இசை என்பது மெல்லிசை மட்டுமல்ல, மக்கள் மனதை, குறிப்பாக, விலங்கினங்கள், தாவரங்களைக்கூட இசையை உணரச் செய்ய முடியும் என்பதை சான்றோர்கள் சங்க இலக்கியங்களிலே முன்பே குறிப்பிட்டுச் சொல்லியிருக்கிறார்கள். கடந்த காலத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்கள் முதலமைச்சராக இருந்த நேரத்தில், ஒவ்வொரு மாவட்டத்திலும் இசைப் பள்ளி தொடங்க வேண்டுமென்று கோரிக்கை வைத்த நேரத்தில், 'இசைப் பள்ளிகள் எல்லா மாவட்டங்களிலும் தொடங்கப்படும்' என்று சொன்னார்கள். அந்த அடிப்படையில், இந்த இசைப் பள்ளியைத் தொடங்குவதன்மூலம் தமிழிசையை வளர்த்தெடுப்பதற்கும், அதே நேரத்தில் தமிழ் இசைவாணர்கள் மறைந்து வருகிற வேளையில், முக்கியத்துவம் இல்லாமல் ஒதுங்கி வருகிற வேளையில், அவர்களுக்கு ஊக்க ஊதியம் கொடுத்து, ஓய்வூதியம் கொடுத்து தமிழ்நாடு கடந்து, உலகெங்கும் வாழக்கூடிய தமிழர்கள் மத்தியில் இந்த இசையை எடுத்துச் செல்வதற்கு அரசு முன்வருமா? மாவட்டந்தோறும் சிதிலமடைந்திருக்கிற இதுபோன்ற பள்ளிகளைச் சீரமைப்பதற்கு அரசு முன்வருமா என்பதைத் தங்கள்மூலமாக அறிய விரும்புகிறேன்.*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.*

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் இப்போது 17 மாவட்டங்களிலே இசைப் பள்ளிகள் நடந்து கொண்டிருக்கின்றன. இஃதன்னியிலே, 4 இடங்களிலே இசைக் கல்லூரிகள் இருக்கின்றன. அதைப்போல, தனியாக, முன்னாள் முதலமைச்சர் அம்மையார் அவர்களுடைய பெயரிலே இயங்கிக் கொண்டிருக்கின்ற ஓர் இசைப் பல்கலைக்கழகம் இருக்கிறது. கலைக் காவிரி நுண்கலைக்கல்லூரி போன்ற அரசு உதவிபெறக்கூடிய கல்லூரிகள் இயங்கிக்கொண்டிருக்கின்றன. இப்போது இருக்கக்கூடிய நிலைமையில் நம்முடைய மாணாக்கர்களுடைய எண்ணிக்கை, அவர்களுடைய தேவையைப் பொறுத்தளவிலே இவை செயல்பட்டுக்கொண்டிருக்கின்றன. நம்முடைய இந்து சமய அறநிலையத் துறையின் சார்பிலும் புதிய பள்ளிகள் தொடங்கப்பட்டிருக்கின்றன. எனவே, மாணவர்கள் எந்த இடத்திலெல்லாம் உருவாகிறார்களோ, எங்கு அந்தத் தேவைகள் உருவாகிறதோ, அந்த இடங்களிலே நிச்சயமாக*

எதிர்காலத்திலே இந்த இசைப் பள்ளிகளை, மாணவர்களுடைய தேவைகளைக் கருத்தில் கொண்டு மாண்புமிகு முதலமைச்சர் அவர்களிடத்திலே கலந்து பேசி அவற்றை உருவாக்கலாம் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

தமிழ் இசை என்பது மிகவும் முக்கியத்துவமான ஒன்று. நீங்கள் சொன்னதைப்போல ஆதி இசை என்பது தமிழ் இசையாகத்தான் இருந்திட வேண்டும். எனவேதான், தமிழிசைக்கு மிகவும் முக்கியத்துவம் கொடுத்தவர்கள் நாம். தஞ்சை நால்வர் என இருக்கக்கூடியவர்கள்; தமிழிசை மூவர் என்று சொல்லக்கூடியவர்கள்; இவர்களெல்லாம் ஒரு பாரம்பரியமான தமிழிசைக்கு உரம் ஊட்டியவர்கள். ஆகவே, அந்த வழியிலே நடக்கக்கூடிய இந்த அரசு தமிழிசைக்கு உரிய முக்கியத்துவத்தை வழங்கும் என்பதையும் நான் இந்த நேரத்திலே மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்கு தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு உறுப்பினர் திரு. ஆர். வைத்திலிங்கம் அவர்கள்.

திரு. ஆர். வைத்திலிங்கம்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னால், மாமன்னன் ராஜராஜ சோழன் தஞ்சையில் பெரிய கோயிலைக் கட்டினான். ஆயிரக்கணக்கான பரதநாட்டியக் கலைஞர்கள், இசைக் கலைஞர்கள் மூலமாக கலைகளை காத்த பெருமை ராஜராஜ சோழனுக்கு உண்டு. அந்தப் பெருமையை மீண்டும் தஞ்சை மாநகருக்குக் கொண்டு வருகின்ற அளவுக்கு பரதநாட்டியப் பள்ளியையும், இசைப் பள்ளியையும் ஏற்படுத்த அரசு முன்வருமா என்று தங்கள் வாயிலாக மாண்புமிகு அமைச்சர் அவர்களைக் கேட்க விரும்புகின்றேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் அவர்கள்.

மாண்புமிகு திரு. தங்கம் தென்னரசு: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சோழ மன்னர்களிலே பெரும் புகழ்வாய்ந்த ராஜ ராஜ சோழன், தஞ்சை களிப்பெண்டுகள் என்ற வகையிலே அங்கே தனியாக ஒரு தளிச்சேரியை உருவாக்கி, இந்தக் கலைஞர்களையெல்லாம் ஊக்குவித்து, அந்தக் கலைகளுக்கு பெரும் முக்கியத்துவம் அளித்தார் என்பதை தஞ்சை பெரிய கோயிலிலே இருக்கக்கூடிய கல்வெட்டுகள் நமக்கு மிகச் சிறப்பாக

2022 ஏப்ரல் 11]

எடுத்துரைக்கின்றன. தஞ்சையே கலைகளுக்கான முக்கியத்துவம் வாய்ந்த ஓர் இடம் என்பதிலே மாற்றுக் கருத்துக்கு இடமில்லை. எனவே, கலைகளை வளர்த்த தஞ்சை மாநகரத்தில் தொடர்ந்து அந்தக் கலைகளுக்கு ஊக்கம் அளிக்கக்கூடிய வகையில் பள்ளியை உருவாக்கிட வேண்டுமென்று நம்முடைய மாண்புமிகு உறுப்பினர் அவர்கள் கோரிக்கை வைத்திருக்கிறார்கள்.

முற்பகல் 10–15

எனவே, காவேரியினால், கலையினால், தமிழும், கலையும் வளர்ந்திருக்கக்கூடிய பகுதி தஞ்சைப் பகுதி. அந்தப் பகுதியிலேயிருந்துதான் நம்முடைய மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் வந்திருக்கிறார்கள். எனவே, நிச்சயமாக வரக்கூடிய காலங்களில் நம்முடைய தேவையைக் கருத்தில் கொண்டு, மாண்புமிகு உறுப்பினர் மதிப்பிற்குரிய அண்ணன் முன்னாள் அமைச்சர் திரு. வைத்திலிங்கம் அவர்கள் தெரிவித்திருக்கக்கூடிய கோரிக்கையையும் அரசு கனிவோடு பரிசீலிக்கும் என்பதை நான் தெரிவித்துக்கொள்ள விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினா வரிசை எண் 87, மாண்புமிகு உறுப்பினர் திரு. மு. பன்னீர்செல்வம், மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள்.*

87—

மணிமண்டபம்

***14473—திரு. மு. பன்னீர்செல்வம்:**

மாண்புமிகு செய்தித் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்காணும் வினாவிற்கு விடையளிப்பாரா—

சீர்காழியில் பின்னணிப் பாடகர் சீர்காழி கோவிந்தராஜன் அவர்களுக்கு மணிமண்டபம் கட்ட அரசு முன்வருமா?

மாண்புமிகு திரு. மு.பெ. சாமிநாதன், செய்தித் துறை அமைச்சர்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,*

சீர்காழி தொகுதி, சீர்காழியில் பின்னணிப் பாடகர் சீர்காழி கோவிந்தராஜன் அவர்களுக்கு மணிமண்டபம் கட்டுவது தொடர்பான கருத்துரு ஏதும் தற்போது அரசின் பரிசீலனையில் இல்லை.